# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 01 – 31, 2024



| வ. எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 9 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 13 |
| 4 | திட்டங்கள் | 16 |
| 5 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 19 |
| 6 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 21 |
| 7 | பாதுகாப்பு | 26 |
| 8 | பொருளாதாரம் | 30 |
| 9 | நியமனங்கள் | 32 |
| 10 | விருதுகள் | 36 |
| 11 | புகழ்பெற்ற நபர்கள் | 40 |
| 12 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 41 |
| 14 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 44 |
| 15 | விளையாட்டுகள் | 50 |
| 16 | நினைவில் நின்றவர்கள் | 58 |
| 17 | அறிக்கைகள் | 59 |
| 18 | தரவரிசைப்பட்டியல் | 61 |
| 19 | முக்கிய தினங்கள் | 63 |



APOLLO STUDY CENTRE

# தமிழ்நாடு

➢ **கோவையில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.**

✓ கோவையில் ஆகஸ்ட் 9ஆம் தேதி தமிழ்ப் புதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் புதன்கிழமை அறிவித்தார்.




✓ இந்தத் திட்டம் பெண்களுக்காக தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டம் போன்றதாகும்.
✓ இது அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து, உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவியாக 1000 வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
✓ தமிழ்வழி அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த சிறுவர்களும் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைவார்கள்.

➢ **குமரி அனந்தனுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கப்பட உள்ளது**
✓ மூத்த காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் இந்த ஆண்டு ‘தகைசால் தமிழர்’ விருதைப் பெறுகிறார்.




✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த விருதுக்கு திரு. குமரி அனந்தன் தேர்வு செய்யப்பட்டார். 2021ஆம் ஆண்டு தி.மு.க. அரசால் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த தமிழ் ஆளுமையைக் கௌரவிப்பதற்காக இந்த விருது நிறுவப்பட்டது என்று செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

- **அரசுப் பள்ளி மாணவர்கள் சிறந்த நிறுவனங்களில் கல்வி பெறுவதற்கு தமிழ்நாடு அரசு நிதியளிக்க உள்ளது**
  - ✓ நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ள மாநில அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் உயர்கல்விச் செலவை தமிழக அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெள்ளிக்கிழமை அன்று தெரிவித்தார்.
  - ✓ வெளிநாட்டில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேரும் மாநில அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பயணச் செலவையும் அரசே ஏற்கும் என்றும் அவர் கூறினார்.
  - ✓ மாநில அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 447 மாணவர்கள் இந்தியாவிலும் அயல்நாட்டிலும் உள்ள நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- **ஆளுகையில் புதுமைக்கான மையம் தமிழ்நாட்டில் அமைக்கப்படும்**
  - ✓ மாநில திட்டக் குழுவில் ஆளுகையில் புதுமைக்கான மையம் அமைக்கப்பட்டுள்ளது




  - ✓ நாட்டிலேயே இந்த வகையில் முதலாவதான இந்த முயற்சியின்மூலம், இந்த மையம் மாநிலத்தின் ஆளுகையில் ஒரு புதுமையான சுற்றுச் சூழல் அமைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - ✓ இது புதுமையான திட்டங்களை முன்னோட்டமிடுவதிலும், மாநிலத்தில் திறமையான நிர்வாகத்தை மேம்படுத்தும் பல்வேறு தொழில்நுட்பங்களில் திறனை வளர்க்கவும் அரசுத் துறைகளுக்கும் மாவட்ட நிர்வாகங்களுக்கும் ஆதரவை வழங்கும்.

- **மாதவரத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரம் திட்டம் அமைக்கப்படும்**
  - ✓ தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தொழில்நுட்ப நகரத் திட்டத்தை வடசென்னையில் உள்ள மாதவரத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.




- ✓ இந்தத் திட்டத்திற்காக 150 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் (Tamil Nadu Industrial Development Corporation - TID- CO) செயல்படுத்தப்படும்.
- ✓ தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் இணைந்த சேவைகள். உலகளாவிய திறன் மையங்கள். ஃபின்டெக் மற்றும் டீப்டெக் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகளாவிய மற்றும் உள்நாட்டு முதலீடுகளை ஈர்ப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

- ➢ **தமிழ்நாடு அரசு புதிய மருந்தகங்களை நிறுவ உள்ளது**
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை அன்று நிகழ்த்திய தனது சுதந்திர தின உரையில், மாநிலம் முழுவதும் முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்படும் என அறிவித்தார்.




- ✓ அடுத்த ஆண்டு தொடங்கப்பட உள்ள இந்த மருந்தங்கள், மானிய விலையில் பொதுவான மருந்துகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

- ➢ **துணிச்சலாக செயல்பட்ட செவிலியர், மூத்த காங்கிரஸ் தலைவர், இஸ்ரோ விஞ்ஞானி ஆகியோரை சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் கௌரவித்தார்**
- ✓ வயநாடு நிலச்சரிவில் சிக்கிய 35க்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காப்பாற்றிய நீலகிரியைச் சேர்ந்த செவிலியர் சபீனாவுக்கு, தைரியம் மற்றும் துணிச்சலான செயலுக்கான தமிழக அரசின் கல்பனா சாவ்லா விருது வியாழக்கிழமை அன்று வழங்கப்பட்டது.



- ✓ திரு. முக. ஸ்டாலின், மூத்த காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தனுக்கு தகைசால் தமிழர் விருதையும் வழங்கினார். திரு. ஆனந்தனின் விடா முயற்சியால் 1978ல் பாராளுமன்றத்தில் தமிழில் பேச அவருக்கு அனுமதி கிடைத்தது.
- ✓ முதலமைச்சர், டாக்டர்.ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருதை, சந்திரயான்-3 திட்ட இயக்குநரும் இஸ்ரோ விஞ்ஞானியுமான பி. வீரமுத்துவேலுக்கு வழங்கினார்.

➢ **இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 42 விழுக்காட்டினர் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர்.**



- ✓ ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகலில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ரூ.706.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழில்துறை குடியிருப்புகளை சனிக்கிழமை அன்று திறந்து வைத்துப் பேசும் போது, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணபுரியம் பெண்களில் 42 விழுக்காட்டின் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர் என்று தெரிவித்தார்.

- **சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்காக கண்காணிப்பு இல்லங்கள்**




- ✓ குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புப் பணிகள் துறையானது, குழந்தைகளுக்கான சிறப்பு சேவைகளுக்கான தமிழ்நாடு அதிகாரம் பெற்ற குழு (Tamil Nadu Empowered Committee on Special Services for Children) என்ற ஒரு சிறப்பு கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளது. இது மாநிலம் முழுவதிலும் உள்ள சட்டத்திற்கு முரணான குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பாதுகாப்பு இடங்கள் மற்றும் ஆப்டர்-கேர் இல்லங்களின் பராமரிப்பை மேற்பார்வை செய்யும்.
- ✓ அரசாணை 46ன்படி, தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட 15 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும்.

**மு. கருணாநிதியைக் கௌரவிக்கும் வகையில் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு**

- ✓ மு. கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு ரூ.100 நாணயத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.




- ✓ முத்துவேல் கருணாநிதி ஒரு எழுத்தாளர், அரசியல்வாதி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஆவார்.
- ✓ அவர் தமிழகத்தின் முதல்வராக 5 முறை பதவி வகித்தார்.
- ✓ நாணயத்தின் பின்புறம் கருணாநிதியின் உருவப்படமும், 'கலைஞர் கருணாநிதியின் பிறந்த நாற்றாண்டு'' என்ற வாசகத்துடன், 'தமிழ் வெல்லும்' என்ற தமிழ் முழக்கமும் இடம் பெற்றுள்ளது.

- **தமிழ்நாடு முதலீட்டு மாநாடு 2024**
- ✓ 19 தொழில்துறை திட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். வணிகர்களை தமிழ்நாட்டின் விளம்பர தூதர்களாக விளங்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.


- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் புதன்கிழமை அன்று நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டு மாநாடு 2024இல், 17,616 கோடி முதலீட்டில் 19 தொழில்துறை திட்டங்களைத் தொடங்கி வைத்தார். மேலும், 51.157 கோடி மதிப்பிலான 28 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

## ➢ சிங்கப்பூரின் செம்கார்ப் (Sembcorp) நிறுவனம் தூத்துக்குடியில் பசுமை அம்மோனியா ஆலையில் முதலீடு செய்ய உள்ளது

- ✓ சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் செம்கார்ப் நிறுவனம் தூத்துக்குடியின் அதிநவீன பசுமை அம்மோனியா ஆலையில் 36.238 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக தமிழக அரசு புதன்கிழமை அன்று அறிவித்தது.
- ✓ இந்த ஆலை ஆரம்பத்தில் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஆண்டுக்கு 2,00,000 டன் பச்சை அம்மோனியாவை உற்பத்தி செய்யும். இந்த ஆலையின் முன்பகுதி பொறியியல் மற்றும் வடிவமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## ➢ மாநிலத்தின் திருத்தப்பட்ட உதவித் தொகை திட்டம்

- ✓ உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் முதுகலை அல்லது முனைவர் பட்டங்களைப் படிக்க மாநில அரசின் உதவித் தொகைத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் பட்டியலின மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின சமூகங்களைச் சேர்ந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகரித்துள்ளது.




- ✓ எஸ்சி-எஸ்டி பட்டதாரிகளுக்கான வெளிநாட்டு உதவித் தொகைத் திட்டத்தை 2003ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தியது.
- ✓ இருப்பினும், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 2022-23 வரை ஒரு சில பட்டதாரிகள் மட்டுமே இந்தத் திட்டத்தைப் பயன்படுத்த முடிந்தது.
- ✓ 2023ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இத்திட்டத்தின்மூலம் பயனடையக் கூடிய பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் பல விதிகளை நீக்கியதன்மூலம், இந்தத் திட்டத்தை மறுசீரமைப்பு செய்தது.

# மாநிலங்கள்

➢ **ஒடிசா அரசு இந்தியாவின் முதல் 'அரிசி ஏடிஎம்'-ஐ அறிமுகம் செய்துள்ளது**

✓ குடும்ப அட்டைதாரர்களுக்கான பொது விநியோக முறையை மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட 'அன்னபூர்த்தி தானிய ஏடிஎம்' எனப்படும் இந்தியாவின் முதல் 24 மணி நேரமும் தானியம் வழங்கும் இயந்திரத்தை ஒடிசா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.




✓ உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் நலத்துறை அமைச்சர் க்ருஷ்ண சந்திர பத்ராவால் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்ட இந்த புதுமையான இயந்திரம் மஞ்சேஸ்வரில் உள்ள ஒரு கிடங்கில் அமைந்துள்ளது. இது உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

➢ **மத்தியப் பிரதேச அரசு சானிட்டரி நாப்கின்களுக்காக பணம் வழங்கும் முன்னோடித் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது**

✓ டாக்டர். மோகன் யாதவ் தலைமையிலான மத்தியப் பிரதேச அரசு, மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்து ஒரு புரட்சிகர நடவடிக்கையை எடுத்துள்ளது.





✓ இந்தியாவிலேயே முதன்முறையாக, சானிட்டரி நாப்கின்களை வாங்கும் பருவப் பெண்களுக்கு நேரடியாகப் பணம் வழங்கும் திட்டத்தை மாநில அரசு தொடங்கியுள்ளது. இந்தப் புதுமையான அணுகுமுறையானது, பொதுவாக சானிட்டரி நாப்கின்களை இலவசமாக விநியோகிக்கும் மற்ற மாநிலங்களில் இருந்து மத்தியப் பிரதேசத்தை வேறுபடுத்திக் காட்டுகிறது.

- ✓ துப்புரவு மற்றும் சுகாதாரத் திட்டத்தின்கீழ், ஒரு வருடத்திற்கு ஒவ்வொரு மாணவியின் கணக்கிலும் முன்னூறு ரூபாய் பணம் மாற்றப்பட்டுள்ளது.
- ✓ ஏழாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 19 இலட்சம் மாணவிகளுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## ➢ 78வது சுதந்திர தினம்

- ✓ ஆகஸ்ட் 15, 2024 அன்று, இந்தியாவில் 78வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.




- ✓ டெல்லி செங்கோட்டையில் பிரதமர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.
- ✓ இந்த ஆண்டுக்கான கருப்பொருள், 'விக்சித் பாரத்' அல்லது 'வளர்ந்த இந்தியா' என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.
- ✓ இது 2047ஆம் அண்டிற்குள் வளர்ந்த தேசத்தின் பார்வையை அடையாளப்படுத்துகிறது. இது இந்தியாவை மாற்றுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- ✓ 2047ஆம் ஆண்டு காலனி ஆதிக்கத்திலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்த 100வது ஆண்டாகும்.

## ➢ டெல்லி விமான நிலையம் 'நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு' நிலையைப் பெறுவதற்காக நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது

- ✓ ஏர்போர்ட் கவுன்சில் இன்டர்நேஷனலின் ஏர்போர்ட் கார்பன் அங்கீகாரத் திட்டத்தின்கீழ், டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் 'நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு விமான நிலையம் (நிலை 5 சான்றிதழ்) நிலையை அடைந்த இந்தியாவின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.



- ✓ ஆரம்பத்தில் இந்த விமான நிலையம் 2030ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைய இலக்கு நிர்ணயித்திருந்தது.
- ✓ ஆனால், புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துதல், மின்சார வாகனங்களை ஊக்குவித்தல் மற்றும் பசுமை விமான நிலையத்திற்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம், இந்த விமான நிலையம் தனது இலக்கை திட்டமிட்ட காலத்திற்கு முன்பாகவே அடைந்துள்ளது.

### ➢ வேளாண் முடிவு ஆதரவு அமைப்பு (Krishi-Decision Support System - DSS)

- ✓ வானிலை, பயிர்முறைகளை ஆய்வு செய்வதற்காக புதிய அமைப்பை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.




- ✓ ஒன்றிய விவசாய அமைச்சகம் மின்னணு புவி இடம் சார்ந்த தளமான வேளாண் - முடிவு ஆதரவு அமைப்பு (Krishi-Decision Support System) ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இது வானிலை முறைகள், மண் நிலைகள், பயிர் ஆரோக்கியம், பயிர் பரப்பளவு மற்றும் விவசாயிகள், வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களுடன் நிகழ்நேர தரவு சார்ந்த நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்ளும்.
- ✓ இந்தத் தளம் வறட்சியைக் கண்காணிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

### ➢ வாரணாசியில் சுத்தமான நதிகள் (Smart Laboratory on Clean Rivers) பற்றிய ஸ்மார்ட் ஆய்வகத்திற்கான மூலோபாய கூட்டணி

- ✓ இந்தியாவிற்கும் டென்மார்க்கிற்கும் இடையிலான பசுமை மூலோபாய கூட்டாண்மையானது வாரணாசியில் சுத்தமான நதிகளில் ஸ்மார்ட் ஆய்வகத்தை உருவாக்க வழிவகுத்தது.



- ✓ இந்திய அரசு, IIT-BHU மற்றும் டென்மார்க் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த முத்தரப்பு முயற்சியானது, நிலையான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வருணா நதிக்குப் புத்துயிர் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டமானது, IIT-BHUஇல் ஒரு கலப்பின ஆய்வக மாதிரியையும், வரணா நிதியில் களத்தில் ஒரு நேரடி ஆய்வகத்தையும் கொண்டுள்ளது. இது அரசு அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு இடையே ஒத்துழைப்பை வளர்க்கிறது.

➢ **இமாச்சல பிரதேசத்தில் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது அதிகரிக்கப்பட்டுள்ளது**

- ✓ இமாசலப் பிரதேசத்தில் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 18இல் இருந்து 21ஆக உயர்த்தப்பட்டுள்ளது.




- ✓ 27 ஆகஸ்ட் 2024 அன்று, இமாச்சலப் பிரதேச மாநில சட்டசபை பெண்களின் குறைந்தபட்ச வயதை அதிகரிப்பதற்கான மசோதாவை நிறைவேற்றியது.
- ✓ இமாச்சலப் பிரதேச மாநில முதல்வர் சுக்விந்தர் சிங் சுகுவின் கூற்றுப்படி, இத்தகைய முயற்சியை மேற்கொண்ட முதல் மாநிலம் இமாச்சலப் பிரதேசம் ஆகும். குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் (இமாச்சலப் பிரதேசத் திருத்தம்) மசோதா, 2024 குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ இந்த மசோதா குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006ஐ திருத்துகிறது.

# தேசிய நிகழ்வுகள்

- **புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (New Maritime Rescue Coordination Centre)**
- ✓ சென்னையில் கடலோர காவல் படையின் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை பாதுகாப்பு அமைச்சர் ராஜநாத் சிங் ஞாயிற்றுக் கிழமை அன்று திறந்து வைத்தார்.



- ✓ இந்த நிகழ்ச்சியில், இரண்டு புதிய கடலோர காவல் படை பிரிவுகளை காணொலி காட்சி மூலம் அவர் தொடங்கி வைத்தார். அவை: சென்னையில் உள்ள பிராந்திய கடல் மாசு பதில்வினை மையம் (Regional Marine Pollution Response Centre) மற்றும் கடலோர காவல்படை ஏர் என்கிளேவ் (Coast Guard Air Enclave) ஆகும்.


- **2024-25ஆம் ஆண்டுக்கான ஆறு நாடாளுமன்ற குழுக்கள்**
- ✓ மக்களவைத் தலைவர் ஆகஸ்ட் 17 அன்று அரசு செலவினங்களை ஆராயும் பொதுக் கணக்குக் குழு உட்பட ஆறு புதிய நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டார். பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் தலைவராக மத்தியப் பிரதேச மாநிலம் சத்னாவைச் சேர்ந்த பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் எம்பி கணேஷ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **2024-25ஆம் ஆண்டுக்கான ஆறு புதிய நாடாளுமன்றக் குழுக்கள்**
- ✓ பொதுக் கணக்குக் குழு
- ✓ பொது நிறுவனங்கள் குழு
- ✓ மதிப்பீடுகள் குழு
- ✓ பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் நலன் குழு
- ✓ இதர பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு
- ✓ இலாப அலுவலகத்தின் கூட்டுக் குழு

- **போல்ஸ்டர் பயோடெக் உற்பத்திக்கான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**
- ✓ உயர் செயல்திறன் கொண்ட உயிரி உற்பத்தியை வளர்ப்பதற்கான பயோ E3 (பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான உயிர் தொழில்நுட்பம்) கொள்கை எனப்படும் உயிரி தொழில்நுட்பம் அடிப்படையிலான உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை சனிக்கிழமை அன்று ஒப்புதல் அளித்தது.




- உயிர் தொழில்நுட்பவியல் துறையால் வழிநடத்தப்பட உள்ள இது, '1990களில் தகவல் தொழில்நுட்பத் துறை வாழ்க்கையில் புரட்சியை ஏற்படுத்தியதுபோல' ஒரு தொழில்நுட்ப புரட்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- உயர் செயல்திறன் உயிரி உற்பத்தி என்பது மருந்து முதல் பொருட்கள் வரை தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் திறன், விவசாயம் மற்றும் உணவு சவால்களை எதிர்கொள்வது மற்றும் மேம்பட்ட உயிரி தொழில்நுட்ப செயல்முறைகளின் ஒருங்கிணைப்பு மூலம் உயிர் அடிப்படையிலான பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.


## ➢ லடாக்கிற்கு ஐந்து புதிய மாவட்டங்கள்




- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திங்கட்கிழமை அன்று, 'ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக' லடாக் யூனியன் பிரதேசத்தில் ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும் என்று கூறினார். அவை: ஜான்ஸ்கர், டிராஸ், ஷாம், நுப்ரா மற்றும் சாங்தாங்.
- லடாக் தற்போது தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில்களைக் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கொண்டுள்ளது. அவை லே மற்றும் கார்கில் ஆகும்.

## ➢ ஷி-பாக்ஸ் போர்ட்டல் (She-Box Portal)

- பணியிடங்களை பெண்களுக்கு பாதுகாப்பானதாக மாற்றுவதற்காக ஷி-பாக்ஸ் போர்ட்டலை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.




- ✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி இன்று புதுதில்லியில் இந்தப் போர்ட்டலைத் தொடங்கி வைத்தார். ஷி-பாக்ஸ் போர்ட்டல் என்பது பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் புகார்களைப் பதிவு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் தொடங்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட ஒரு தளமாகும்.
- ✓ இந்தத் தளமானது புகார்களைப் பதிவு செய்வதற்கும், அதன் நிலையைக் கண்காணிப்பதற்கும் மற்றும் உள்ளகக் குழுக்கள் மூலம் புகார்கள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தீர்வு செய்யப்படுவதை உறுதி செய்வதற்கும் வசதியை வழங்குகிறது.

# திட்டங்கள்

- **தீன் தயாள் ஸ்பார்ஷ் யோஜனா (Deen Dayal SPARSH Yojana)**

✓ மத்திய தகவல் தொடர்பு அமைச்சகத்தின்கீழ் உள்ள அஞ்சல் துறையானது, இந்தியா முழுவதிலும் உள்ள மாணவர்களிடையே தபால்தலை சேகரிப்பில் ஆராய்ச்சி மற்றும் உதவித் தொகையை ஊக்குவிப்பதற்காக தீன் தயாள் ஸ்பார்ஷ் யோஜனாவை அறிமுகப்படுத்தியுள்ளது.




✓ 'உகந்த மற்றும் சிறந்த தபால் தலைகள்' (The Ideal and Great Stamps) என்ற ஓவியக் கண்காட்சியின் நிறைவு விழாவின்போது, வடக்கு குஜராத் பிராந்திய போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் கிருஷ்ண குமார் யாதவ் இதை அறிவித்தார். இந்தத் திட்டம் குழந்தைகளிடையே தபால்தலை சேகரிப்பு பொழுது போக்கை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் 'விக்யான் தாரா (Vigyan Dhara)' திட்டம்.**




✓ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் 'விக்யான் தாரா' என்ற ஒருங்கிணைந்த மத்தியத் துறை திட்டத்தில் இணைக்கப்பட்ட மூன்று குடை திட்டங்களைத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ நிதி பயன்பாட்டில் செயல்திறனை மேம்படுத்துவதற்காகவும், துணைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒத்திசைவை உறுதி செய்வதற்காகவும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 15வது நிதி ஆணைய காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரை) 10,579.84 கோடி செலவில், இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு சுற்றுச் சூழல் அமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த 'விக்யான் தாரா' செயல்படுகிறது.

## ➢ ஸ்பைஸ்டு (SPICED) திட்டம்

- மசாலா வாரியம், மசாலா ஏற்றுமதி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக ஸ்பைஸ்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.




- இந்திய மசாலா வாரியம் ஸ்பைஸ்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது மசாலா ஏற்றுமதி மற்றும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான ஒரு மூலோபாய முயற்சியாகும்.
- 'ஏற்றுமதி மேம்பாட்டிற்கான முற்போக்கான, புதுமையான மற்றும் கூட்டுத் தலையீடுகள் மூலம் மசாலாத் துறையில் நிலைத் தன்மை' என்று அதிகாரப்பூர்வமாக பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம், 15வது நிதி ஆணையத்தின் எஞ்சியுள்ள காலம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

## ➢ ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (Unified Pension Scheme)

- பிரதமர் தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை இன்று ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம்: 25 ஆண்டுகளுக்கான குறைந்தபட்ச தகுதிச் சேவைக்காக ஓய்வு பெறுவதற்கு முந்தைய 12 மாதங்களில் பெறப்பட்ட சராசரி அடிப்படை ஊதியத்தின் 50 விழுக்காடு.
- இந்த ஊதியமானது குறைந்தபட்சம் 10 வருட சேவை வரை குறைவான சேவை காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.
- 23 இலட்சம் மத்திய அரசு ஊழியர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைவார்கள். இது ஏப்ரல் 1, 2025 முதல் அமலுக்கு வரும்.

## ➢ ரீசெட் (RESET) திட்டம்

- ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா இன்று புதுதில்லியில் தேசிய விளையாட்டு தினத்தையொட்டி, 'ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அதிகாரமளிக்கும் பயிற்சி' (Retired Sportsperson Empowerment Training) திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.






- ✓ இந்தத் திட்டம் ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொடுத்து அவர்களை மேலும் வேலைவாய்ப்பிற்கு உட்படுத்துவதன்மூலம் அவர்களின் தொழில் வளர்ச்சிப் பயணத்திற்கு ஆதரவளிக்கும்.
- ✓ ரீசெட் திட்டம் தலைமுறைகளுக்கிடையேயான இடைவெளியைக் குறைக்கும் என்றும், ஓய்வுபெற்ற நமது விளையாட்டு வீரர்களின் தனித்துவமான திறன்கள் புதிய தலைமுறை ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்குப் பயனளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

APPOLO STUDY CENTRE

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

➢ **சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் புதிய நீர் தொழில்நுட்ப மையம்**

✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் புதிய நீர் தொழில்நுட்ப மையத்திற்காக இந்தியாவும் இஸ்ரேலும் இணைந்து செயல்படுகின்றன.




✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுடப்க் கழகத்தில் புதிய நீர் தொழில்நுட்ப மையத்தை நிறுவுவதற்கு இந்தியாவும் இஸ்ரேலும் ஒப்பந்தம் செய்துள்ளன. சென்னை ஐஐடி-யில் நீர் தொழில்நுட்ப மையத்தை நிறுவுவதற்கு இரு நாடுகளும் கூட்டு நோக்கத்தை வெளியிட்டன.

✓ இந்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் இஸ்ரேல் தூதரகம், ஐஜடி சென்னை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் அம்ருத் மிஷன் ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.

✓ நீர் தொழில்நுட்பத்தில் புதுமை, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான மையமாக மாறுவதே இந்த நீர் தொழில்நட்ப மையத்தின் நோக்கமாகும்.

➢ **இந்தியாவும் போலந்தும்**

✓ பிரதமர் மோடி வார்சா சென்றடைந்தார். இது 1979க்குப் பிறகு இந்தியப் பிரதமர் இந்த நாட்டிற்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை ஆகும்.




✓ இந்தியாவிற்கும் போலந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70வது ஆண்டு நிறைவை ஒட்டி, இந்த விஜயம் இருதரப்பு உறவுகளைப் புதுப்பித்து புதிய நிலைக்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ பிரதமர் மோடி வார்சாவில் உள்ள டோப்ரி மகாராஜா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.
- ✓ இரண்டாம் உலகப் போரில் வீரமரணமடைந்த வீரர்களை பிரதமர் கௌரவித்தார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போரில் இந்திய மற்றும் போலந்து துருப்புகள் ஒன்றாக இணைந்து போரிட்டன.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **32வது சர்வதேச விவசாயப் பொருளாதார நிபுணர்களின் மாநாடு (International Conference of Agricultural Economists)**




- ✓ இந்தியா 32வது சர்வதேச விவசாயப் பொருளாதார நிபுணர்களின் மாநாட்டை புதுதில்லியில் ஆகஸ்ட் 2-7, 2024 வரை நடத்த உள்ளது. இது 1958ல் கடைசியாக நடத்தப்பட்டதிலிருந்து 66 ஆண்டு கால இடைவெளியைக் குறிக்கிறது.
- ✓ மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மாநாடு, பூசா நிறுவனத்தில் நடைபெறும். இது ‘நிலையான வேளாண் உணவு முறைகளை நோக்கிய மாற்றம்’ என்பதில் கவனம் செலுத்துகிறது.

➢ **32வது சர்வதேச விவசாயப் பொருளாதார நிபுணர்களின் மாநாடு**




- ✓ பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகஸ்ட் 3 அன்று புதுதில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32வது சர்வதேச மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ✓ 75 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

APOLLO STUDY CENTRE

➢ **பிம்ஸ்டெக் வணிக உச்சி மாநாட்டை இந்தியா நடத்த உள்ளது**

✓ இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம், இந்திய தொழில்கூட்டமைப்பு (Confederation of Indian Industries) உடன் இணைந்து ஆகஸ்ட் 6, 2024 அன்று புது தில்லியில் முதலாவது பிம்ஸ்டெக் வணிக உச்சி மாநாட்டை நடத்த உள்ளது.




✓ இந்த வணிக மாநாட்டின் முதல் பதிப்பு பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation - BIMSTEC) உறுப்பு நாடுகளிடையே வலுவான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகள் மூலம் அதிக பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **பசி இல்லாத உலகம் பற்றிய சர்வதேச மாநாடு (International Conference on Hunger Free World)**

✓ "சுற்றுச் சூழல் நிலைத் தன்மை மற்றும் விவசாயிகளின் நலனை மையப்படுத்துதல் ஆகியவையே எப்போதும் பசுமைப்புரட்சிக்கான எம்.எஸ். சுவாமிநாதனின் தொலைநோக்குப் பார்வை" என்று கர்நாடக வருவாய்த்துறை அமைச்சர் கிருஷ்ண பைரே கவுடா சென்னையில் புதன்கிழமை அன்று தெரிவித்தார்.




✓ 'பசி இல்லாத உலகம் பற்றிய சர்வதேச மாநாடு : பசுமைப் புரட்சிக்கான எம்.எஸ். சுவாமிநாதனின் தொலைநோக்குப் பார்வை' என்ற சர்வதேச மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசிய திரு. கவுடா, 'எப்போதும் பசுமையான புரட்சிக்கு அவர் அளித்த

முக்கியத்துவத்திலிருந்து எதிர்காலத்திற்கான இரண்டு குறிப்புகளை நான் பெறுகிறேன்' என்று கூறினார்.

- ✓ முதலாவது, பருவநிலை மாற்றத்துடன் கூடிய சுற்றுச் சூழல் நிலைத்தன்மை மற்றும் விவசாய அமைப்புகளுக்கு அது ஏற்படுத்தும் சவால்கள். பேராசிரியர் சுவாமிநாதன் எங்களை கவனத்தில் கொள்ளும்படி வற்புறுத்திய மற்றொரு கருப்பொருள் விவசாயிகளின் நலன் பற்றிய பிரச்சினை.

## ➢ 28வது மத்திய மற்றும் மாநில புள்ளியியல் அமைப்புகளின் மாநாடு

- ✓ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், மத்திய மற்றும் மாநில புள்ளியியல் நிறுவனங்களின் 28வது மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.




- ✓ இந்த மாநாட்டின் கருப்பொருள், 'முடிவெடுப்பதற்காக தரவுகளின் பயன்பாடு – மாநில புள்ளியியல் அமைப்பை வலுப்படுத்துதல்' என்பதாகும்.
- ✓ இந்த மாநாட்டின்போது மத்திய மற்றும் மாநில அரசு துறைகளுக்கு இடையே பொதுவான ஆர்வமுள்ள பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- ✓ 30க்கும் மேற்பட்ட மத்திய அமைச்சகங்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் துறைகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## ➢ இந்தியா – ஐரோப்பிய ஒன்றிய மாநாடு

- ✓ ஐரோப்பிய ஒன்றியம், உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு கவுன்சில் (Global Counter-Terrorism Council) மற்றும் இந்தியாவின் வெளியுறவு அமைச்சகத்துடன் ஒரு மூலோபாய கூட்டாளியாக இணைந்து, ஆகஸ்ட் 21-22 தேதிகளில் ஒரு முக்கியமான பிராந்திய மாநாட்டை நடத்தியது.



- ✓ மின்னணு தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் இருக்கும் தெற்காசிய நாடுகள் (இந்தியா, வங்காளதேசம், மாலத்தீவு மற்றும் இலங்கை) மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளை புதுதில்லியில் இரண்டு நாள் நடைபெறும் ஐரோப்பா - இந்தியா டிராக் 1.5 மாநாடு ஒன்றிணைக்கிறது.
- ✓ இந்த மாநாடு இந்த பிராந்தியத்தில் பயங்கரவாத எதிர்ப்பு பேச்சுவார்த்தைகளையும், கூட்டாண்மைகளையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ உலகளாவிய முத்தமிழ் முருகன் மாநாடு 2024

- ✓ சமீபத்தில், பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் உலகளாவிய மாநாட்டில், உலகம் முழுவதிலிருந்தும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்று, தமிழ் கலாச்சாரம் மற்றும் ஆன்மீகத்தை வெளிப்படுத்தினர்.



- ✓ இந்த மாநாட்டின் நோக்கங்களில் முருக வழிபாட்டின் அடிப்படைக் கொள்கைகளைப் பரப்புதல், முருகனுடைய தத்துவக் கோட்பாடுகளை அணுகும்படி செய்தல், உலகளாவிய பக்தர்களை ஒன்றிணைத்தல் ஆகியவை அடங்கும்.
- ✓ ஜப்பானில் இருந்து 50க்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.
- ✓ அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, சிங்கப்பூர், மொரிஷியஸ் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 1,300 ஆய்வுக் கட்டுரைகள் இதில் இடம் பெற்றன.

## ➢ இண்டஸ்-எக்ஸ் உச்சி மாநாடு 2024 (INDUS-X Summit 2024)

- ✓ செப்டம்பர் 9-10, 2024 அன்று ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் இந்தியா- அமெரிக்க பாதுகாப்பு முடுக்க சுற்றுச் சூழல் அமைப்பின் (India-US Defense Acceleration Ecosystem - INDUS-X) உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பை அமெரிக்க - இந்தியா மூலோபாய கூட்டாண்மை மன்றம் (India-US Defense Acceleration Ecosystem (INDUS-X) அறிவித்தது.




- ✓ இந்த உச்சி மாநாடு, பாதுகாப்பு கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கு தனியார் முதலீட்டை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும். மேலும், இந்த மாநாடு சிறந்த கொள்கை வகுப்பாளர்கள், குழு விவாதங்கள் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி ஆகியவற்றையும் கொண்டிருக்கும்.

- **அசோசெம் சுற்றுச் சூழல் மற்றும் கார்பன் மாநாடு (ASSOCHAM Environment And Carbon Conference)**

- ✓ ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங், புதுதில்லியில் அசோசெம் சுற்றுச் சூழல் மற்றும் கார்பன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.



- ✓ இந்த மாநாட்டின் கருப்பொருள் '2070க்குள் நிகர பூஜ்ஜியத்தை அடைவதற்கான கூட்டுச் சூழலை வளர்ப்பது' என்பதாகும்.
- ✓ 2070ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜியத்தை அடைய அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும், விக்ஷித் பாரத் 2047 தொலைநோக்கை நிறைவேற்றுவதாகவும் அவர் கூறினார்.

# பாதுகாப்பு

- **மாபெரும் சர்வதேச விமானப் பயிற்சி ‘தரங்சக்தி’ (Tarang Shakti)**

✓ இந்தியா தனது முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியான ‘தரங் சக்தி 2024’ ஐ ஆகஸ்ட் 6ஆம் தேதி தமிழ்நாட்டின் சூலூரில் தொடங்கி இரண்டு கட்டங்களாக நடத்தியது.




✓ இதில் சுமார் 30 நாடுகள் பங்கேற்றன. பத்து நாடுகள் தங்கள் போர் விமானங்களைக் கொண்டு வந்தன.

✓ இந்தப் பயிற்சியானது இந்தியாவின் பாதுகாப்புத் திறனை வெளிப்படுத்துவதையும், பங்கேற்கும் ராணுவத்தினரிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ முதற்கட்டமாக ஆகஸ்ட் 6ஆம் தேதி முதல் 14ம் தேதி வரை தமிழ்நாட்டின் சூலூரில் இந்தப் பயிற்சி நடைபெறும்.

- **கடல்சார் கூட்டாண்மை பயிற்சி (Maritime Partnership Exercise)**

✓ 328வது ரஷ்ய கடற்படை தின அணிவகுப்புக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக இந்திய கடற்படையின் முன்னணி போர்க்கப்பலாகிய ஐஎன்ஸ் தபார் நான்கு நாள் பயணமாக 25 ஜூலை 24 அன்று ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றடைந்தது.




✓ ஐஎன்எஸ் தபார் 30 ஜூலை 2024 அன்று ரஷ்ய கடற்படைக் கப்பலான சூப்ரசைட்டெல்னி (Soobrazitelny) உடன் கடல்சார் கூட்டாண்மை பயிற்சியில் பங்கேற்றது.

- ✓ கடல்சார் கூட்டாண்மை பயிற்சியானது தொடர் சிக்கலான கடற்படை சூழ்ச்சிகளை உள்ளடக்கியது. இதில் தகவல் தொடர்பு பயிற்சிகள், தேடல் மற்றும் மீட்பு உத்திகள் மற்றும் கடல் தொடர்களில் நிரப்புதல் ஆகியவை அடங்கும்.

➤ **உதரா சக்தி பயிற்சி (Udara Shakti)**

- ✓ உதரா சக்தி 2024 என்ற இருதரப்பு பயிற்சிக்காக இந்திய விமானப் படைக் குழு மலேசியாவின் குவாந்தனுக்கு வந்தது.




- ✓ இந்தப் பயிற்சியானது உறவுகளை வலுப்படுத்துதல், பராமரிப்பு நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் இரண்டு விமானப் படைகளுக்கு இடையிலான செயல்பாட்டு ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ✓ 05-09 ஆகஸ்ட் 2024 வரை திட்டமிடப்பட்ட இந்தப் பயிற்சியின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் ஒரு அற்புதமான தொடக்க விழா நடத்தப்பட்டது.
- ✓ இந்தப் பயிற்சியானது, இந்திய விமானப்படைப் பிரிவு உறுப்பினர்களுக்கு RMAF-இன் சில சிறந்த நிபுணர்களுடன் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், பரஸ்பர போர்த்' திறன்களைப் பற்றி விவாதிக்கவும் வாய்ப்பளிக்கும்.


➤ **'பர்வத் பிரஹார்' பயிற்சி (Parvat Prahaar)**



- ✓ இந்திய இராணுவம் லடாக்கில், உயரமான போர் மற்றும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, 'பர்வத் பிரஹார்' என்ற மூலோபாய இராணுவப் பயிற்சியை நடத்தியது.
- ✓ இந்தியா – சீனா எல்லைக்கு அருகில் உள்ள பிராந்தியத்தில் இராணுவத்தின் தயார் நிலையையும் செயல்திறனையும் பராமரிக்க இந்தப் பயிற்சி முக்கியமானது ஆகும்.

➢ **மித்ரா சக்தி (Mitra Shakti)**

✓ இந்திய இராணுவத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையிலான இருதரப்பு கூட்டாண்மை மித்ரா சக்தி இராணுவப் பயிற்சியானது ஆகஸ்ட் 12, 2024 அன்று தொடங்கியது.




✓ மாதுரு ஓயாவிலுள்ள இலங்கை இராணுவப் பயிற்சிப் பள்ளியில் நடைபெற்ற இந்த ஆண்டு பயிற்சியானது, இந்த இரண்டு தெற்காசிய நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

✓ ஆகஸ்ட் 25 வரை நடைபெற்ற இந்த ஒருங்கிணைந்த பயிற்சியானது இரண்டு நாடுகளின் ராணுவ திறன்களை மேம்படுத்துவதற்கும் வலுவான இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கும் உள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

➢ **நீண்ட தூர சறுக்கு வெடிகுண்டு, கௌரவ் (Long Range Glide Bomb, GAURAV)**

✓ நீண்ட தூர சறுக்கு வெடிகுண்டு, கௌரவின் முதல் சோதனை ஓட்டத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வெற்றிகரமாக நடத்தியது.




✓ இந்திய விமானப் படையின் சுகோய் - 30 எம்கே-1ல் இருந்து வெற்றிகரமான முதல் சோதனை விமானம் நிகழ்த்தப்பட்டது.

✓ இந்தச் சோதனை ஒடிசா கடற்கரையில் நடத்தப்பட்டது. கௌரவ் என்பது காற்றில் ஏவப்பட்ட சறுக்குக் குண்டு என்பதைக் குறிக்கும்.

✓ இது ஆயிரம் கிலோ எடை கொண்ட சறுக்கு வெடிகுண்டு. இது நீண்ட தூரத்தில் உள்ள இலக்குகளை அடைந்து தாக்கும் திறன் கொண்டது.

- கடல்சார் கூட்டாண்மை பயிற்சி **(Maritime Partnership Exercise)**
  - இந்திய கடற்படையின் முன்னணி போர்க் கப்பலான ஐஎன்எஸ் தபார் 2024 ஆகஸ்ட் 25 அன்று ஸ்பெயினின் மலாகாவிற்கு இரண்டு நாள் நிகழ்ச்சிக்காக சென்றது.




  - இந்தக் கப்பல் ஆகஸ்ட் 27 அன்று புறப்பட்டதும், மத்திய தரைக் கடலில் ஸ்பானிஷ் கடற்படைக் கப்பலான அடலயாவுடன் கடல்சார் கூட்டாண்மை பயிற்சியில் பங்கேற்றது.
  - இந்தியா மற்றும் ஸ்பெயினுக்கு இடையே வளர்ந்து வரும் கடல்சார் ஒத்துழைப்பில் இந்தப் பயிற்சி குறிப்பிடத்தக்க மைல்கல்லாக உள்ளது. இது கடல்சார் களத்தில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதைப் பிரதிபலிக்கிறது.

APOLLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **இந்தோ பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு (Indo Pacific Economic Framework)**

✓ விநியோகச் சங்கிலிக் குழுவின் (Supply Chain Council) துணைத் தலைவராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது நமது நாட்டிற்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.




✓ விநியோகச் சங்கிலி மீட்சி தொடர்பான செழுமை ஒப்பந்தத்திற்கான மைல்கல் இந்தோ பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தத்தின்கீழ், இந்தியா மற்றும் 13 இந்திய பசிபிக் பொருளாதார கட்டமைப்பு கூட்டமைப்பு நாடுகள் மூன்று விநியோகச் சங்கிலி அமைப்புகளை நிறுவியுள்ளதாக ஒன்றிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

✓ இந்த விநியோகச் சங்கிலி குழுவின் தலைவராக அமெரிக்கா தேர்நதெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- **ஜூலை 2024இல் ஜிஎஸ்டி வசூல் 10.3 விழுக்காடு அதிகரித்து 1.82 இலட்சம் கோடியாக உள்ளது**

✓ ஜூலை 2024இல், இந்தியாவின் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 10.3 விழுக்காடு அதிகரித்து 1,82,075 கோடியாக உயர்ந்தது. இது ஜூலை 2023இல் இருந்த 1,65,105 கோடியிலிருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது.




✓ இந்த உயர்வு வலுவான உள்நாட்டு நுகர்வு மற்றும் பொருளாதார மீட்சியை எடுத்துக் காட்டுகிறது.

- **கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விண்வெளித் துறை 20,000 கோடி பங்களித்துள்ளது**

✓ இந்தியாவின் விண்வெளித் துறையானது கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 24 பில்லியன் டாலர் (20,000 கோடி) அளவுக்கு நேரடியாகப் பங்களித்துள்ளது.



'Space sector contributed ₹20,000 crore to India's GDP over the last decade'

Jacob Koshy
NEW DELHI

India's space sector has directly contributed about $24 billion (₹20,000 crore) to India's Gross Domestic Product over the last decade. It has directly supported 96,000 jobs in the public and private sector. For every dollar produced by the space sector, there was a multiplier effect of $2.54 to the Indian economy and India's space force was 2.5 times "more productive" than the coun-

President Droupadi Murmu, Minister Jitendra Singh and ISRO Chairman S. Somanath at the space exhibition in New Delhi.

the National Space Day celebrations here on Friday.
The Space Day celebra-

RO), Mr. Bochinger said, to evaluate the socio-economic impact of the space

✓ இது பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் 96,000 வேலைகளை நேரடியாக அதிகரித்துள்ளது. விண்வெளித் துறையால் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு டாலருக்கும், இந்தியப் பொருளாதாரத்தில் 2.54 டாலரின் பெருக்கல் விளைவு இருந்தது. இந்தியாவின் விண்வெளிப் படையானது நாட்டின் பரந்த தொழில்துறை பணியாளர்களை விட 2.5 மடங்கு 'அதிக உற்பத்தி' கொண்டதாகும்.

STUDY CENTRE

# நியமனங்கள்

➢ **லெப்டினன்ட் ஜெனரல் சாத்னா சக்சேனா நாயர்**

✓ லெப்டினன்ட் ஜெனரல் சாத்னா சக்சேனா நாயர் பொது மருத்துவ சேவைகள் (இராணுவம்) ஆக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி ஆனார்.

✓ லெப்டினன்ட் ஜெனரல் சாத்னா சக்சேனா நாயர் ஆகஸ்ட் 01, 2024 அன்று பதவியேற்றார்.

✓ அவர் முன்னதாக, டிஜி மருத்துவமனை சேவைகள் (ஆயுதப்படை) பதவியை வகித்த முதல் பெண்மணி ஆவார்.




✓ அவர் இந்திய விமானப்படையின் மேற்கு விமானப்படை மற்றும் பயிற்சிக் கட்டளையின் முதல் பெண் முதன்மை மருத்துவ அதிகாரியும் ஆவார்.

✓ அவர் டாக்டர். கஸ்தூரிரங்கன் குழுவின் நிபுணர் உறுப்பினராக பரிந்துரைக்கப்பட்டார். தேசிய கல்விக் கொள்கையின் மருத்துவக் கல்விக் கூறுகளின் ஒரு பகுதியை வரைவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டது.

➢ **நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ்**

✓ நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் வங்காளதேச இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.



- ✓ வங்காளதேச இடைக்கால அரசின் தலைவரை நியமிப்பதற்கான முடிவு ஜனாதிபதி ஷஹாபுதீனுக்கும் பாகுபாடுகளுக்கு எதிரான மாணவர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது எடுக்கப்பட்டது.
- ✓ முன்னதாக, பாகுபாடு எதிர்ப்பு மாணவர் இயக்கத்தின் 13 பேர் கொண்ட குழு வங்காளதேசத்தின் தற்போதைய நிலைமை மற்றும் இடைக்கால அரசாங்கத்தின் அவுட்லைன் குறித்து விவாதிப்பதற்காக பங்கபாபனுக்குச் சென்றது.

➢ **மூத்த ஐஏஎஸ் அதிகாரி டி.வி. சோமநாதன் அடுத்த அமைச்சரவை செயலாளராக நியமிக்கப்பட்டார்.**

- ✓ ஐஏஎஸ் அதிகாரி டி.வி. சோமநாதனை கேபினட் செயலகத்தில் சிறப்புப் பணி அதிகாரியாக நியமித்து, கேபினட் செயலாளராக ஒன்றிய அரசு சனிக்கிழமை அன்று அறிவித்தது.



- ✓ தற்போதைய ராஜீவ் கௌபாவின் நீட்டிக்கப்பட்ட பதவிக்காலம் முடிவடையும்போது ஆகஸ்ட் 30 முதல் அவர் இந்த இந்தியாவின் உயர்மட்ட அதிகாரத்துவ பதவியை ஏற்பார்.

➢ **புதிய உள்துறை செயலாளர்**

- ✓ புதிய உள்துறை செயலாளராக கோவிந்த் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.




- ✓ புதிய மத்திய உள்துறை செயலாளராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி கோவிந்த் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ✓ அவர் ஆகஸ்ட் 22ஆம் தேதி பதவிக்காலம் முடிவடையும் அஜய் குமாருக்குப் பிறகு பதவியேற்பார். அவரது நியமனம் அமைச்சரவையின் நியமனக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எஃகு அமைச்சகத்தின் செயலாளராக சந்தீப் பவுண்ட்ரிக் பொறுப்பேற்றார்.

- ✓ இவர் முன்பு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகராகப் பணியாற்றினார்.

### ➢ தமிழ்நாட்டின் புதிய தலைமைச் செயலாளர் 2024

- ✓ ஷிவ்தாஸ் மீனாவுக்குப் பதிலாக மூத்த ஐஏஎஸ் அதிகாரி என். முருகானந்தத்தை தலைமைச் செயலாளராக தமிழக அரசு நியமித்துள்ளது.




- ✓ அவர் தமிழ்நாட்டின் 50வது தலைமைச் செயலாளராகப் பதவியேற்றார்.
- ✓ மேலும், ஏ. பத்மநாபன் (1985) மற்றும் ஏ.பி. முத்துசாமி (1999) ஆகியோருக்குப் பிறகு அவர் தமிழகத்தின் மூன்றாவது தலித் தலைமைச் செயலாளர் ஆனார்.

### ➢ தேசிய பாதுகாப்புப் படையின் புதிய இயக்குநர் ஜெனரல்




- ✓ ஐபிஎஸ் அதிகாரியான பி. சீனவாசன், தேசிய பாதுகாப்புப் படையின் புதிய டைரக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ ஜம்மு காஷ்மீரின் சிறப்பு காவல்துறை தலைமை இயக்குநராக நளின் பிரபாத் நியமிக்கப்பட்ட பிறகு பி. சீனிவாசன் நியமிக்கப்பட்டார்.

- ✓ ஆகஸ்ட் 31, 2027 வரை, தேசிய பாதுகாப்புப் படையின் டைரக்டர் ஜெனரலாக சீனிவாசனை நியமிக்க அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

- ➢ **கேபினட் செயலாளராக டாக்டர். டி. வி. சோமநாதன் பதவியேற்றார்**




- ✓ 1987 தமிழ்நாடு கேடரின் மூத்த ஐஏஎஸ் அதிகாரியான டாக்டர். டி.வி. சோமநாதன், ராஜீவ் கவுபாவின் பணி ஓய்வுக்குப் பிறகு, இந்திய அரசின் கேபினட் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- ✓ டாக்டர். சோமநாதன் மத்திய மற்றும் மாநில அரசு பதவிகளில் இருந்தும், சர்வதேசப் பொறுப்புகளில் இருந்தும், குறிப்பாக உலக வங்கியில் இருந்தும் விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.
- ✓ அவர் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் ஆவார். மேலும், அவர் ஒரு தகுதிவாய்ந்த பட்டய கணக்காளர், செலவு கண்காளர் மற்றும் நிறுவன செயலாளராகவும் உள்ளார்.

# விருதுகள்

➢ **குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிற்கு 'கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் பிஜி' விருது வழங்கப்பட்டது.**

✓ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு பிஜியின் அதி உயர் கௌரவமான கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் பிஜி (Companion of the Order of Fiji) விருது பிஜியின் அதிபரால் வழங்கப்பட்டது.




✓ குடியரசுத் தலைவர் முர்மு பிஜி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அங்கு அவர் இந்த இரு நாடுகளுக்கு இடையிலான 75 ஆண்டு கால இராஜதந்திர தொடர்புகளை நினைவுகூர்ந்தார்.

✓ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சுவாவிற்கு (Suva) வந்தடைந்தவுடன், பிஜி இராணுவப் படையால் அவருக்கு சம்பிரதாய மரியாதை அளிக்கப்பட்டது.

➢ **ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் (Rashtriya Vigyan Puraskar)**

✓ இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைத் துறைகளில் மிக உயர்ந்த அங்கீகாரமாக ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் விருதை அரசு அறிவித்துள்ளது.




✓ ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்காரின் நோக்கம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் தலைமையிலான கண்டுபிடிப்புகளின் பல்வேறு துறைகளில், தனித்தனியாகவோ அல்லது குழுக்களாகவோ, விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் செய்த குறிப்பிடத்தக்க மற்றும் ஊக்கமளிக்கும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதாகும்.

- ✓ விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவர்களின் பங்களிப்புக்காக இஸ்ரோ-சந்திரயான் 3 குழுவுக்கு இந்த விருது வழங்கப்படும்.

➢ **சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான எம்.எஸ். சுவாமிநாதன் விருது**




- ✓ இந்திய ஆயுர்வேத நிறுவனம் மற்றும் ஒருங்கிணைவு மருத்துவத்தின் (Indian Institute of Ayurveda and Integrative Medicine) தலைவர் ஆனந்த் தர்ஷன் சங்கர், சுற்றச் சூழல் பாதுகாப்பிற்கான எம்.எஸ். சுவாமிநாதன் விருது 2024 வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ✓ கவின்கரே பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து ரோட்டரி கிளப் ஆப் மெட்ராஸ் கிழக்கு இந்த விருதை வழங்கியது.

➢ **திமோர் லெஸ்டியின் (Timor Leste) மிக உயர்ந்த குடிமை விருது**

- ✓ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, திமோர் லெஸ்டியின் மிக உயரிய சிவிலியன் விருதான – கிராண்ட் காலர் ஆப் ஆர்டர் ஆப் திமொர் லெஸ்தே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த விருதை திமோர் லெஸ்தே அதிபர் ஜோஸ் ராமோஸ் ஹோர்டா வழங்கினார்.




- ✓ இந்த விருது திமோர் - லெஸ்டே தலைநகர் டிலியில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் முர்முவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ✓ இந்தியாவுக்கும் திமோர் லெஸ்டேயுக்கும் இடையே தற்போது தூதரகப் பணிகள் இல்லை.

➢ **பாரிசில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் ஒலிம்பிக் ஆர்டர் விருது**

✓ இந்தியாவின் முதல் தனிநபர் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற அபினவ் பிந்த்ராவுக்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் மதிப்புமிக்க ஒலிம்பிக் ஆர்டர் விருது, பாரிசில் நடைபெற்ற 142வது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அமர்வில் வழங்கப்பட்டது.



✓ ஒலிம்பிக் ஆர்டர் என்பது ஒலிம்பிக் இயக்கத்திற்கான விதிவிலக்கான பங்களிப்புகளை அங்கீகரித்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் வழங்கப்படும் மிக உயரிய கௌரவமாகும்.

✓ 2008 பெய்ஜிங் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் முதல் தனிநபர் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை பிந்த்ரா வென்றார்.

➢ **70வது தேசிய திரைப்பட விருது**

✓ 70வது தேசிய திரைப்படவிருது வழங்கும் விழா புது தில்லியில் ஆகஸ்ட் 16ஆம் தேதி நடைபெற்றது.

✓ ‘ஆட்டம்’ சிறந்த திரைப்படமாகத் தேர்வு செய்யப்பட்டது.



✓ ‘காந்தாரா’ திரைப்படத்தில் நடித்ததற்காக ரிஷப் ஷெட்டிக்கு சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது.

✓ சிறந்த நடிகை பிரிவில், இந்த விருது நித்யா மேனன் மற்றும் மானசி பரேக் ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்பட்டது.

✓ நித்யா தமிழ்த் திரைப்படமான ‘திருச்சிற்றம்பலம்’ படத்தில் அவரது திறமை வாய்ந்த நடிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டார். அதே சமயம், மானசி குஜராத்தி திரைப்படமான ‘கட்ச் எக்ஸ்பிரஸ்’ மூலம் பார்வையாளர்களைக் கவர்ந்தார்.

## ➢ லதா மங்கேஷ்கர் விருது

- ✓ மத்தியப் பிரதேச அரசு தேசிய லதா மங்கேஷ்கர் விருதை பிரபல இசையமைப்பாளர் உத்தம் சிங் மற்றும் பின்னணி பாடகர் கே.எஸ். சித்ரா ஆகியோருக்கு செப்டம்பர் 28 அன்று நடைபெறும் விழாவில் வழங்க உள்ளது.



- ✓ மாநில கலாச்சாரத்துறை ஒவ்வொரு ஆண்டும் லதா மங்கேஷ்கரின் பிறந்த நாளில் இந்த விருதை வழங்கி வருகிறது.
- ✓ உத்தம் சிங்கிற்கு 2022ஆம் ஆண்டிற்கான விருதும், சித்ராவிற்கு 2023ஆம் ஆண்டிற்கான விருதும் வழங்கப்படும்.

## ➢ 2024ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருது

- ✓ ராஜகுப்பம் கிராமத்தின் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆசிரியராகிய 42 வயது ஆர். கோபிநாதன், 2024ஆம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




- ✓ ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியையின் மகனான இவர் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களில் ஒருவர் ஆவார். மதுரை டி.வி. சுந்தரம் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆர்.எஸ். முரளிதரன் மற்றொரு ஆசிரியர் ஆவார்.

# புகழ்பெற்ற நபர்கள்

➢ **கமலா ஹாரிஸ்**

✓ அமெரிக்க துணை ஜனாதிபதியாகிய கமலா ஹாரிஸ், ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தனது வேட்புமனுவை முறைப்படி உறுதி செய்துள்ளார்.



✓ கமலா ஹாரிஸ் ஒரு பெரிய அரசியல் கட்சியிலிருந்து வேட்பு மனுவை வென்ற முதல் இந்திய- அமெரிக்கர் ஆனார்.

✓ ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டுப் பிரதிநிதிகளின் ஐந்து நாள் சுற்று ஆன்லைன் வாக்குப் பதிவுக்குப் பிறகு ஹாரிஸின் நியமனம் அதிகாரபூர்வமாக உறுதியானது.

➢ **ஐந்து வயதே உடைய தேக்பீர் சிங், கிளிமஞ்சாரோ மலையை வெற்றி கொண்டார்.**





✓ பஞ்சாப் மாநிலம் ரோபரைச் சேர்ந்த 5 வயது சிறுவன் தேக்பீர் சிங், மலையேறுதல் வரலாற்றில் தனது பெயரை பொறித்துள்ளார்.

✓ கடல் மட்டத்திலிருந்து 5,895 மீட்டர் உயரத்தில் உள்ள, ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த சிகரமான கிளிமஞ்சாரோ மலையை வெற்றிகரமாக சென்றடைந்த இளம் ஆசியர் என்ற பெருமையை தேக்பீர் பெற்றுள்ளார்.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **'India@100'**

✓ ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், பேராசிரியர் கே.வி. சுப்பிரமணியன் எழுதிய 'இந்தியா@100: நாளைய பொருளாதார கற்பனை செய்து பார்த்தல் (India@100: Envisioning Tomorrow's Economic Powerhouse) என்ற புத்தகத்தை புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.




✓ வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய திரு. கோயல், 1.4 பில்லியன் குடிமக்களின் கூட்டு முயற்சியால் இந்தியா விக்சித் பாரத் இலக்கை அடைய முடியும் என்றார்.

- உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், சுற்றுலா, உற்பத்தி, கப்பல் போக்குவரத்து, தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் 2047ம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாறும் என்ற தனது நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

- **கிர் மற்றும் ஆசிய சிங்கங்கங்கள் பற்றிய பரிமல் நத்வானியின் புத்தகம்**



- ✓ மாநிலங்களவை உறுப்பினரான பரிமல் நத்வானி, ஜூலை 31 அன்று தனது புதிய புத்தகமான 'கால் ஆப் தி கிர்' இன் முதல் பிரதியை பிரதமர் நரேந்திர மோடியிடம், அவரது இல்லத்தில் நடைபெற்ற ஒரு சிறிய குடும்ப கூட்டத்தின்போது வழங்கினார்.
- ✓ இந்தப் புத்தகத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

➢ **புத்தக வெளியீட்டு விழாவின் முக்கிய அம்சங்கள் - 'இந்தியாவின் 75 மாபெரும் புரட்சியாளர்கள்'**

- ✓ மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங், எம்பி. பீம் சிங்கின் 'இந்தியாவின் 75 மாபெரும் புரட்சியாளர்கள் (75 Great Revolutionaries of India)' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார்.




- ✓ அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்களை முன்னிலைப்படுத்தியமைக்காக அவரது பணியை சிங் பாராட்டினார்.
- ✓ இந்தப் புத்தகத்தில் உள்ள 75 புரட்சியாளர்களின் கதைகளும் இந்தியாவின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் ஒவ்வொருவரின் ஆன்மாவையும் லட்சியத்தையும் தூண்டுகின்றன' என்று அவர் கூறினார்.

➢ **விஞ்ஞானி தொழில்முனைவோர்: மில்லியன் கணக்கான பெண்களுக்கு அதிகாரமளித்தல்**

- ✓ செயற்பாட்டாளர் கல்பனா சங்கரின் சயசரிதைப் புத்தகத்தை சௌமியா சுவாமிநாதன் வெளியிட்டார்.





- ✓ பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் சமூக தொழில்முனைவோரைக் கொண்டாடும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வில், டாக்டர். கல்பனா சங்கரின் சுயசரிதை, 'விஞ்ஞானி தொழில்

முனைவோர்: மில்லியன் கணக்கான பெண்களுக்கு அதிகாரமளித்தல் (The Scientist Entrepreneur: Empowering Millions of Women)' கதீட்ரல் சாலையில் வெளியிடப்பட்டது.

- ✓ இந்தப் புத்தக வெளியீட்டு விழாவானது, பெண்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக மேம்பாட்டில் அடிமட்ட முயற்சிகளின் தாக்கத்தை எடுத்துக் காட்டும் வகையில், பல்வேறு துறைகளில் இருந்து குறிப்பிடத்தக்க நபர்களை ஒருங்கிணைத்து நடைபெற்றது.

## ➢ **'சப்னோ கி உதான்' மின் இதழின் முதல் பதிப்பு**




- ✓ இந்தியாவின் தேசிய விண்வெளி தினத்தன்று, சந்திரயான்-3 நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியதன் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது, NCERT உடன் இணைந்து 'சப்னோ கி உதான்' என்ற மின் இதழை அறிமுகப்படுத்தியது.
- ✓ ஒன்றிய கல்வி அமைச்சர், ஸ்ரீதர்மேந்திர பிரதான், முதல் பதிப்பை மெய்நிகராக வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் மத்திய கல்வி இணை அமைச்சர் ஸ்ரீ ஜெயந்த சவுத்ரியும் கலந்து கொண்டார்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

➢ **சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஆக்சியம்-4 பணிக்கான குழுவை இந்தியா தேர்ந்தெடுக்கிறது**

✓ சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வரவிருக்கும் ஆக்சியம்-4 பயணத்திற்காக, குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா மற்றும் குரூப் கேப்டன் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர் ஆகிய இரண்டு விண்வெளி வீரர்களை இந்தியா தேர்வு செய்து அறிவித்துள்ளது.



✓ இஸ்ரோ மற்றும் நாசா இடையே மனித விண்வெளிப் பயண ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும், இந்தியாவின் சொந்த மனித விண்வெளித் திட்டத்தை முன்னேற்றுவதிலும் இந்தப் பணி ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

➢ **புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் (Earth Observation Satellite) -8**

✓ இஸ்ரோ ஆகஸ்ட் 15ஆம் தேதி புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்-8ஐ விண்ணில் செலுத்துகிறது. இந்தப் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்-8 சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை (Small Satellite Launch Vehicle) டி3 மூலம் ஏவப்படும்.



✓ இந்தப் புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்-08 பணியின் முக்கிய நோக்கத்தில் மைக்ரோசாட்டிலைட்டை வடிவமைத்து உருவாக்குதல் மற்றும் மைக்ரோசாட்டலைட் பஸ்ஸுடன் இணக்கமான பேலோட் கருவிகளை உருவாக்குவது ஆகியவை அடங்கும்.

✓ எலக்ட்ரோ-ஆப்டிகல் இன்ப்ராரெட் பேலோடு (Electro-Optical Infrared Payload), குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம் - ரிப்ளெக்டோமெட்ரி பேலோட் (Global

Navigation Satellite System-Reflectometry Payload) மற்றும் SiC UV டோசி மீட்டர் (SiC UV Dosimeter) ஆகியவை இந்தப் பணிக்கான பேலோடுகள் ஆகும்.

- ✓ எலக்ட்ரோ-ஆப்டிகல் இன்ப்ராரெட் பேலோடு நடு அலை ஐஆர் (எம்ஐஆர்) மற்றும் நீண்ட அலை (ஐஆர்-எல்டபிள்யூஐஆர்) பேண்டுகளில் படங்களைப் பிடிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ தகவல் தொடர்பு, பேஸ்பேண்ட் மற்றும் நிலைநிறுத்தல் தொகுப்பு எனப்படும் ஒருங்கிணைந்த ஏவியோனிக்ஸ் அமைப்பு போன்ற செயற்கைக் கோள் மெயின்பிரேம் அமைப்புகளில் புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் 08 குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்யும்.

## ➢ மருந்து எதிர்ப்பு காசநோய்க்கான புதிய சிகிச்சை முறையை இந்தியா அறிமுகப்படுத்த உள்ளது

- ✓ அனைத்து மலட்டி ட்ரக் ரெசிஸ்டண்ட் காசநோய் (MDR-TB) மற்றும் விரிவான மருந்து எதிர்ப்பு காசநோய் (XDR-TB) நோயாளிகளுக்கு BPaL (பெடாகுலைன், ப்ரீடோமானிட் மற்றும் லைன்சோவிட்) விதிமுறைகளை வெளியிட இந்தியா தயாராகி வருகிறது.
- ✓ இந்தப் புதிய முயற்சிக்கான பயிற்சி இம்மாதம் தொடங்க உள்ளது.
- ✓ M/XDR காசநோய்க்கு எதிரான நாட்டின் போரில் இது ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

## ➢ செரோபீஜியா சிவராயனா (Ceropegia Shivrayiana)

- ✓ மகாராஷ்டிராவில் உள்ள விஷால்காட் வளாகத்தில் 'செரோபீஜியா' இனத்தைச் சேர்ந்த ஒரு புதிய பூக்கும் தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு செரோபீஜியா ஷிவ்ராயனா என்று பெயரிடப்பட்டுள்ளது.




- ✓ செரோபீஜியா ஷிவ்ராயனா என்பது சத்ரபதி சிவாஜி மஹாராஜின் நினைவாக பெயரிடப்பட்ட ஒரு பூக்கும் தாவர இனமாகும்.
- ✓ இந்த தாவரமானது பாறை நிலங்களில் செழித்து வளரும். இது குறைந்த ஊட்டச்சத்து அல்லது மோசமான மண்ணில் வளரும் திறன் கொண்டது.

➢ **நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா)**

✓ நீலக்குறிஞ்சி அதிகாரப்பூர்வமாக ‘அழிவின் விளிம்பில் உள்ள இனமாக’ மாறுகிறது. இந்த நீலக்குறிஞ்சி இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தில் (International Union for Conservation of Nature) அழிந்து வரும் உயிரினங்களின் அதிகாரப்பூர்வ சிவப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.




✓ இந்த முன்னோடி இனத்திற்கான முதல் உலகளாவிய சிவப்புப் பட்டியல் மதிப்பீடு இதுவாகும்.

✓ நீலக்குறிஞ்சி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.

✓ உயரமான மலைத் தொடர்களின் 14 சுற்றுச் சூழல் பகுதிகளுக்குள் இந்த இனம் 34 துணை எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

➢ **மூன்று புதிய ராம்சர் தளங்கள்**

✓ இந்தியா மூன்று புதிய ராம்சார் தளங்களை ஈரநில வலையமைப்பில் சேர்த்துள்ளது. இதன் மூலம் இந்தியாவில் உள்ள மொத்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது.




✓ தமிழ்நாட்டில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் மற்றும் கழுவேலி பறவைகள் சரணாலயம் ஆகியவை இந்தியாவின் ராம்சார் தளங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

✓ இந்தியாவின் ராம்சார் தளங்களின் பட்டியலில் மத்தியப் பிரதேசத்தின் தவா நீர்த்தேக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது.

✓ ஜூன் 2024 நிலவரப்படி, இந்தியாவில் மொத்தம் 82 ராம்சார் தளங்கள் உள்ளன.

- ✓ ராம்சார் தளம் என்பது ராம்சார் மாநாட்டின் மூலம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்ட ஈரநில தளமாகும்.
- ✓

- ➢ **உலக சுகாதார அமைப்பு, எம்பாக்ஸை உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது.**
- ✓ உலக சுகாதார அமைப்பு ஆகஸ்ட் 14, 2024 அன்று எம்பாக்ஸ்-ஐ 'சர்வதேச அக்கறை உள்ள பொது சுகாதார அவசரநிலை' (public health emergency of international concern) என்று அறிவித்துள்ளது.




- ✓ குறிப்பாக காங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் பிற ஆப்பிரிக்க நாடுகளில் எம்பாக்ஸ் நோர்வுகள் அதிகரிப்பதை நிபுணர்கள் கவனித்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- ✓ எம் பாக்ஸ் முன்னதாக குரங்கு அம்மை என்ற அழைக்கப்பட்டது. இது பெரும்பாலும் மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் காணப்படும் ஒரு வைரஸ் நோயாகும்.
- ✓ இது முதன் முதலில் 1958இல் குரங்குகளில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், முக்கியமாக கொறித்துண்ணிகள் மூலம் பரவுகிறது.

- ➢ **இஸ்ரோ SSLV-D3-EOS-08 ஐ அறிமுகப்படுத்தியது**
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் **SSLV-D3-EOS-08** விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்தப் பணி பூமியைக் கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சிறிய செயற்கைக் கோளை ஏவியது.





- ✓ இது பிப்ரவரி 2023இல் தொடங்கப்பட்ட முந்தைய **SSLV-D3-EOS-07** பணியின் வெற்றியை பின்பற்றுகிறது.

- ✓ SSLV-D3-EOS-08 என்பது இஸ்ரோவின் சிறிய செயற்கைக் கோள் ஏவுதல் வாகனம் தொடரின் மூன்றாவது விமானமாகும். இந்தப் பணி இந்தப் புதிய ராக்கெட்டின் வளர்ச்சி கட்டத்தை நிறைவு செய்கிறது.
- ✓ முதலில் ஆகஸ்ட் 15ஆம் தேதி திட்டமிடப்பட்டது. ஆகஸ்ட் 16ஆம் தேதி காலை 9.19 மணிக்கு இந்திய நேரப்படி ஏவுதல் மாற்றப்பட்டது.
- ✓ சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்பட்டது.

➢ **கேரள பல்கலைக் கழகம் பாதுகாப்புக்காக மேம்பட்ட சயனைடு சென்சார் ஒன்றை உருவாக்கியுள்ளது.**

- ✓ டாக்டர். ரவிக்குமார் கனபர்த்தி தலைமையிலான கேரள பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு, உணவு மற்றும் நீர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக புதுமையான சயனைடு சென்சார் ஒன்றை உருவாக்கியுள்ளது.




- ✓ இந்த சென்சார் சயனைடை கண்டறியும்போது நிறத்தை மாற்றுகிறது. இது சயனைடு பாதிப்புக்குள்ளான பகுதிகளில் இந்த நச்சுத் தன்மையைக் கண்காணிக்க நம்பகமான முறையை வழங்குகிறது.
- ✓ சுகாதார அபாயங்களைத் தடுப்பதற்கு இந்தத் தொழில்நுட்பம் முக்கியமானது ஆகும். குறிப்பாக சயனைடு நிறைந்த உணவுகளை உட்கொள்ளும் பகுதிகளில் இது மிகவும் முக்கியமானது ஆகும்.

➢ **ரூமி (RHUMI)-1**

- ✓ இந்தியா தனது முதல் மறுபயன்பாட்டு கலப்பின ராக்கெட் (RHUMI-1)ஐ ஏவியுள்ளது.



- ✓ இந்தியாவின் முதல் மறுபயன்பாட்டு கலப்பின ராக்கெட்டான, RHUMI-1 ஐ, மார்ட்டின் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனமாகிய ஸ்பேஸ் சோன் இந்தியா (Space Zone India) உருவாக்கியுள்ளது.
- ✓ இது சென்னையில் உள்ள திருவிடந்தையிலிருந்து ஏவப்பட்டுள்ளது.
- ✓ இந்த ராக்கெட் 3 கியூப் செயற்கைக் கோள்களையும், 50 PICO செயற்கைக் கோள்களையும் சுமந்து சென்றது.
- ✓ புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த ஆராய்ச்சி நோக்கங்களுக்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக இந்த செயற்கைக் கோள் பயன்படுத்தப்படும்.

APOLLO STUDY CENTRE

# விளையாட்டுகள்

➢ **ஸ்வப்னில் குசலே வெண்கலப் பதக்கத்தை வென்றார்.**

✓ பாரிஸ் ஒலிம்பிக்கில் 50 மீட்டர் ரைபிள் 3 நிலைகளில் ஸ்வப்னில் குசலே வெண்கலப் பதக்கம் வென்றார்.



✓ சுறுசுறுப்பான கடைசி ஆட்டத்தில், 28 வயதான ஸ்வப்னில் குசலே பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் மூன்றாவது பதக்கத்தை உறுதி செய்துள்ளார்.

✓ வியாழன் அன்று நடைபெற்ற 50 மீட்டர் ரைபிள் 3 நிலை இறுதிப் போட்டியில் குசலே வெண்கலப் பதக்கத்தை வென்றார். துப்பாக்கி சுடும் போட்டிகளில் இந்தியாவின் வளர்ந்து வரும் பதக்கப்பட்டியலில் மேலும் ஒரு எண்ணிக்கையை அவர் சேர்த்தார்.

➢ **நோவக் ஜோகோவிச்**

✓ நோவக் ஜோகோவிச் தனது முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை ஒலிம்பிக்கில் வென்றார்.




✓ ஆடவர் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச் 7-6 (3). 7-6 (2) என்ற செட் கணக்கில் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தினார். அவர் ஏற்கனவே 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

✓ நோவக் ஜோகோவிச் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற அதிக வயதானவர் என்ற பெருமையையும் பெற்றார்.

APP STUDY CENTRE

➢ **நட்சத்திர துப்பாக்கி சுடும் வீராங்கனையான மனு பாக்கர் இந்தியாவின் கொடியை ஏந்தினார்.**




- ✓ இரண்டு முறை ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தியாவின் மனு பாக்கர், பாரிஸ் ஒலிம்பிக்கின் நிறைவு விழாவில் இந்தியாவின் தேசியக் கொடியை ஏந்திச் செல்வதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் ஆதாரங்களின்படி, இந்த நிகழ்வின்போது பெண்களுக்கான கொடி ஏந்தியவராக பாக்கர் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துவார்.

➢ **2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் ஐனேஷ் போகட் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.**




- ✓ இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தனது 50 கிலோ தங்கப் பதக்கத்திற்கான எடை தேவையை பூர்த்தி செய்யத் தவறியதால் பாரிஸ் ஒலிம்பிக்கில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
- ✓ அறிக்கையின்படி, போகட் அனுமதிக்கப்பட்ட எடை வரம்பை விட வெறும் 100 கிராம் மட்டுமே அதிகம் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இது அவரது தகுதியிழப்புக்கு வழிவகுத்தது.
- ✓ போட்டி விதிகளின்படி, 50 கிலோ எடைப் பிரிவில் தங்கம் மற்றும் வெண்கலம் வென்றவர்களை மட்டுமே விட்டுவிட்டு வெள்ளிப் பதக்கத்திற்கு அவர் தகுதி பெறாமல் இருந்துவிட்டார்.

➢ **4வது மத்திய ஆசிய வாலிபால் கூட்டமைப்பு நடத்திய பெண்கள் வாலிபால் தேசிய லீக் 2024 போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது**

✓ இந்திய பெண்கள் தேசிய கைப்பந்து அணி 4வது மத்திய ஆசிய வாலிபால் சங்கம் நடத்திய மகளிர் வாலிபால் தேசிய லீக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் சர்வதேச அரங்கில் தங்கள் திறமையை மீண்டும் நிரூபித்துள்ளது. T




✓ பரபரப்பான இறுதிப் போட்டியில், இந்தியா 3-2 செட் கணக்கில் போட்டியை நடத்தும் நாடான நேபாளத்தை வீழ்த்தி, இரண்டாவது மத்திய ஆசிய வாலிபால் கூட்டமைப்பு பட்டத்தை வென்றது.

✓ இந்த மதிப்புமிக்க நிகழ்வு நேபாளத்தின் காத்மாண்டுவில் உள்ள தசரத் விளையாட்டு மைதானத்தில் ஆகஸ்ட் 7, 2024 அன்று முடிவடைந்தது.

➢ **பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்**




✓ நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா, பாரிஸ் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்யில் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.

✓ சோப்ராவின் இந்த சீசனின் சிறந்த எறிதலான 89.45 மீட்டர் அவருக்கு இரண்டாவது இடத்தைப் பெற்றுத் தந்தது. ஆனால், பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் 92.97 மீட்டர் தூரம் எறிந்து ஒலிம்பிக் சாதனையை முறியடித்ததால், அவரால் தனது பட்டத்தைத் தக்க வைக்க முடியவில்லை.

➢ பாரிஸ் 2024 ஒலிம்பிக்கில் இந்திய ஆண்கள் ஹாக்கி அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது




- ✓ வியாழக்கிழமை அன்று பாரிசில் உள்ள Yves du Manoir விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஸ்பெயினை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த இந்திய ஆண்கள் ஹாக்கி அணி, பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தது.
- ✓ இந்த வெற்றியானது இந்திய ஹாக்கி அணிக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமைந்துள்ளது. ஏனெனில், இந்த அணி 1972 முனிச் விளையாட்டுகளுக்குப் பிறகு அதன் முதல் ஒலிம்பிக் பதக்கத்தைத் தற்போது பெற்றுள்ளது

➢ **பாரிஸ் 2024 நிறைவு விழாவில் ஸ்ரீஜேஷ் மற்றும் பேக்கர் இணைந்து இந்தியாவிற்காக கொடியேந்துகின்றனர்.**



- ✓ பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் ஹாக்கி கோல் கீப்பர் பி.ஆர் ஸ்ரீஜேஷ் மற்றும் பிஸ்டல் துப்பாக்கி சுடும் வீராங்கனை மனு பாக்கர் ஆகியோர் இந்தியாவின் கொடியை ஏந்தும் இணையாக விளங்குவார்கள் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.
- ✓ இந்த முடிவு ஸ்ரீஜேஷின் புகழ்பெற்ற வாழ்க்கை மற்றும் பாக்கரின் சமீபத்திய சாதனைகளை எடுத்துக் காட்டுகிறது.

➢ **பாரிஸில் 2024ல் நடைபெற்ற 57 கிலோ மல்யுத்தத்தில் அமன் செஹ்ராவத் வெண்கலப் பதக்கம் வென்றார்.**



- ✓ பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டியில், இந்தியாவின் அமன் செஹ்ராவத், ஆண்களுக்கான 57 கிலோ மல்யுத்தப் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்று, இந்தியாவின் ஒலிம்பிக் மல்யுத்த வரலாற்றில் பெருமை சேர்த்தார்.
- ✓ வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில், செஹ்ராவத் 13-5 என்ற புள்ளிக் கணக்கில் போர்ட்டோ ரிக்கோவின் டேரியன் டோய் குரூஸைத் தோற்கடித்து, இந்த விளையாட்டில் வளர்ந்து வரும் நட்சத்திரமாக தனது நற்பெயரை மீண்டும் உறுதி செய்தார்.

➢ **பாரிஸ் ஒலிம்பிக் 2024 – பதக்கப் பட்டியல்**

- ✓ அமெரிக்காவும் சீனாவும் 2024 போட்டிகளில் தலா 40 தங்கப் பதக்கங்களுடன் அதிக தங்கப் பதக்கங்களை வென்ற நாடுகளாகத் திகழ்கின்றன.




- ✓ அமெரிக்கா 126 (40 தங்கம், 44 வெள்ளி மற்றும் 42 வெண்கலம்) பதக்கங்களைப் பெற்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- ✓ சீனா 91 (40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலம்) பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- ✓ இந்தியா, ஒரு வெள்ளி ஐந்து வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 6 பதக்கங்களுடன், ஒட்டு மொத்த பதக்கப் பட்டியலில் 71வது இடத்தைப் பிடித்தது.

➢ **இந்த ஆண்டு பதக்கம் வென்றவர்கள்**

- ✓ 1. மனு பாக்கர் - வெண்கலப் பதக்கம் - துப்பாக்கி சுடுதல்
- ✓ 2. மனு பாக்கர் மற்றும் சரப்ஜோத் சிங் - வெண்கலப் பதக்கம் - துப்பாக்கி சுடுதல்
- ✓ 3. ஸ்வப்னில் குசலே – வெண்கலப் பதக்கம் - துப்பாக்கி சுடுதல்
- ✓ 4. இந்திய ஹாக்கி அணி – வெண்கலப் பதக்கம்
- ✓ 5. நீரஜ் சோப்ரா – வெள்ளிப் பதக்கம் - ஈட்டி எறிதல்

✓ 6. அமன் செஹ்ராவத் - வெண்கலப் பதக்கம் - மல்யுத்தம்

➢ **பாரிஸ் பாராலிம்பிக்ஸ் 2024**

✓ பாரிசில் பாராலிம்பிக்ஸ் 2024 தொடக்க விழாவில் சுமித் ஆண்டில் மற்றும் பாக்யஸ்ரீ ஜாதவ் ஆகியோர் இந்தியாவின் கொடியை ஏந்துவார்கள்.




✓ 84 விளையாட்டு வீரர்களுடன், டோக்கியோ 2020இல் 54 தடகள வீரர்கள் எண்ணிக்கையை விஞ்சி, பாராலிம்பிக்ஸில் இந்தியா தனது மிகப்பெரிய அணியை களமிறக்குகிறது.

✓ சுமித் பாராலிம்பிக் ஈட்டி எறிதல் சாம்பியன் ஆவார். பாக்யஸ்ரீ 2022 ஆசிய பாரா கேம்ஸ் மற்றும் 2024 உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஷாட்புட்டில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் ஆவர்.

✓ பாராலிம்பிக்ஸ் ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 8, 2024 வரை பிரான்சில் (பாரிஸ்) நடைபெறும்.

➢ **டயானா பூண்டோல்: தேசிய சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் இந்திய பெண் பந்தய வீராங்கனை ஆவார்.**

✓ பூனேவைச் சேர்ந்த ஆசிரியரும் தாயுமான டயானா பூண்டோல், சென்னையில் நடைபெற்ற எம்ஆர்எப் இந்திய தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் 2024 இல் சலூன் பிரிவில் தேசிய சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் இந்தியப் பெண் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.



- ✓ பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு விளையாட்டில் அவரது சாதனை குறிப்பாக குறிப்பிடத்தக்கது ஆகும். பல சாவல்கள் இருந்தபோதிலும் அவரது உறுதியையும் திறமையையும் இது எடுத்துக்காட்டுகிறது.

➢ **பாராலிம்பிக்ஸ் விளையாட்டுகள் 2024**

- ✓ பாராலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகள் 2024 ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 8 வரை பாரிசில் நடைபெறுகின்றன. இது பிரான்சின் முதல் கோடைக்கால பாராலிம்பிக்ஸ் ஆகும்.




- ✓ முன்னதாக, 1992 குளிர்கால பாராலிம்பிக் போட்டிகள் பிரான்சின் டிக்னெஸ் மற்றும் ஆர்பர்ட்வில்லில் நடைபெற்றன.
- ✓ 84 இந்திய பாரா தடகள வீரர்கள் பாராலிமிக்ஸ் விளையாட்டு 2024இல் போட்டியிடுவார்கள். இது பாராலிம்பிக் வரலாற்றின் இந்தியாவின் மிகப்பெரிய எண்ணிக்கையைக் கொண்ட குழுவாகும்.
- ✓ பாராலிம்பிக்ஸ் 2024ல் 22 விளையாட்டுகளில் 12இல் இந்தியா பங்கேற்கும்.
- ✓ பாரா சைக்கிள் ஓட்டுதல், பாரா ஜூடோ மற்றும் பாரா ரோயிங் ஆகியவற்றில் பாராலிம்பிக்ஸ் விளையாட்டு 2024இல் இந்தியா முதல்முறையாக அறிமுகமாகும்.
- ✓ பாரிஸ் 2024 பாராலிம்பிக்ஸ் செப்டம்பர் 9ஆம் தேதி நிறைவு விழாவுடன் முடிவடையும்.

➢ **அவனி லேகரா**

- ✓ 2024 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் ஸ்டேண்டிங் SH1 போட்டியில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை அவனி லெகாரா வென்றார்.



- ✓ இரண்டு பாராலிம்பிக் தங்கப் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை அவனி லெகாரா பெற்றார்.
- ✓ 2020 டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில், அவர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பதக்கம் வென்ற நாட்டின் முதல் பெண் துப்பாக்கி சுடும் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.
- ✓ அவர் தனது பட்டத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்து, இறுதி நிலைகளில் 249.7 புள்ளிகளுடன் பாராலிம்பிக் விளையாட்டு சாதனையைப் படைத்தார்.
- ✓ பாராலிம்பிக் விளையாட்டு 2024 ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 8 வரை பாரிசில் நடைபெறும்.

APOLLO STUDY CENTRE

# நினைவில் நின்றவர்கள்

➢ **யாமினி கிருஷ்ணமூர்த்தி**

✓ பரதநாட்டியம் மற்றும் குச்சிப்புடி நடனக் கலைஞர் யாமினி கிருஷ்ணமூர்த்தி தனது 84வது வயதில் காலமானார்.




✓ அவர் 1968ல் பத்மஸ்ரீ, 2001இல் பத்மபூஷன் மற்றும் 2016இல் பத்ம விபூஷன் ஆகியவற்றைப் பெற்றார்.
✓ 1977ல் சங்கீத நாடக அகாடமி விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.
✓ புது தில்லியில் உள்ள ஹவுஸ் காசில் யாமினி ஸ்கூல் ஆப் டான்ஸ் என்ற தனது சொந்த நடனப் பயிற்சி நிறுவனத்தை நிறுவினார்.

➢ **அக்னி ஏவுகணைகளின் தந்தை டாக்டர் ராம் நரேன் அகர்வால் காலமானார்.**




✓ புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானியும் இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தின் உந்து சக்தியுமான டாக்டர் ராம் நரேன் அகர்வால் தனது 84வது வயதில் ஹைதராபாத்தில் வியாழக்கிழமை அன்று காலமானார்.
✓ 'அக்னி ஏவுகணைகளின் தந்தை' என்று அன்புடன் அழைக்கப்படும் டாக்டர். அகர்வாலின் இந்திய பாதுகாப்புத் திறன்களுக்கு அவர் செய்த பங்களிப்புகள் புரட்சிகரமானவை ஆகும்.

# அறிக்கைகள்

➢ **கடந்த ஆண்டு உடல் உறுப்பு தானம் செய்ததில் ஆண்களை விட பெண்களே அதிகம் ஆகும்.**

✓ உடல் உறுப்பு தானம் செய்வதில் பெண்கள் முன்னணியில் உள்ளனர். இதனால் இறுதிநிலை உறுப்பு செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைத்தது.




✓ கடந்த ஆண்டு 5,651 ஆண்களுடன் ஒப்பிடுகையில், உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை 9,784 ஆக இருந்ததாக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவு காட்டுகிறது.

✓ ஒரு திருநங்கை மற்றொரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓர உறுப்பைப் பங்களித்தார். 2023இல் நாட்டில் வாழும் நன்கொடையாளர்களின் மொத்த எண்ணிக்கை 15,436 ஆக அதிகரித்துள்ளது.

➢ **உலகளாவிய உணவு மற்றும் பானங்கள் அறிக்கை 2024**

✓ சமீபத்திய உணவு மற்றும் பானங்கள் 2024 அறிக்கையின்படி இந்திய பிராண்ட் ஆகிய ‘அமுல்’’உலகின் வலிமையான உணவுப் பிராண்டாக’ தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.




✓ அமுல் ஏற்கனவே உலகின் நம்பர் ஒன் பால் பிராண்ட் தரவரிசையில் உள்ளது. இருப்பினும், நம்பர் ஒன் வலுவான உணவு பிராண்டாக தரவரிசைப்படுத்தப்படுவது ஒரு பெரிய அங்கீகாரம் ஆகும். கடந்த ஆண்டு, அமுல் இந்தப் பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தது.

- ✓ உலகின் முன்னணி பிராண்ட் ஆலோசனை நிறுவனமான பிடாண்ட் பைனான்ஸ் - ஆல் மிகவும் மதிப்புமிக்க மற்றும் வலிமையான உணவு, பால் மற்றும் மது அல்லாத பானங்கள் பிராண்டுகள் பற்றிய வருடாந்திர அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது..

APOLLO STUDY CENTRE

# தரவரிசைப்பட்டியல்

- **உலகின் 2வது பெரிய அலுமினியம் உற்பத்தியாளராக இந்தியா தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது**

✓ பல முக்கிய கனிமங்களில் ஈர்க்கக் கூடிய தரவரிசைகளுடன், கனிம உற்பத்தியில் உலகளாவிய அளவில் முன்னணியில் இந்தியா தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது.




✓ நமது நாடு 2வது பெரிய அலுமினியம் தயாரிப்பாளராகவும், 3வது பெரிய சுண்ணாம்பு உற்பத்தியாளராகவும், உலகின் 4வது பெரிய இரும்பு தாது உற்பத்தியாளராகவும் உள்ளது.

✓ இந்தத் தரவரிசைகள் உலகளாவிய கனிமத் தொழிலில் இந்தியாவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அத்துடன் இத்துறையில் அதன் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

- **2023ஆம் ஆண்டில் உலகளாவிய விவசாய ஏற்றுமதியில் இந்தியா எட்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது**

✓ 2022ஆம் ஆண்டில் 55 பில்லியன் டாலரில் இருந்து 51 பில்லியன் டாலராக ஏற்றுமதி குறைந்திருந்த போதிலும், 2023ஆம் ஆண்டில் உலகின் எட்டாவது பெரிய விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா தனது இடத்தைப் பிடித்துள்ளது.




✓ ஏற்றுமதி செய்யும் முதல் பத்து நாடுகளில் ஏழு நாடுகளில் விவசாய ஏற்றுமதி பொதுவாகக் குறைந்துள்ள நிலையில் இந்த நிலைத் தன்மை ஏற்பட்டுள்ளது.

➢ **பயணம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீடு 2024**

✓ உலகப் பொருளாதார மன்றம் சமீபத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டை வெளியிட்டது. இது உலகளாவிய சுற்றுலாத் துறையில் இந்தியாவின் நிலையைப் பற்றிய விரிவான மதிப்பீட்டை வழங்குகிறது.




✓ உலகெங்கிலும் உள்ள சுற்றுலாத் துறைகளின் போட்டித் திறன் மற்றும் நிலைத் தன்மையை மதிப்பிடுவதற்கு இந்தக் குறியீடு ஒரு முக்கியமான அளவு கோலாகும்.

✓ 2024இல் பயணம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில் 119 நாடுகளில் இந்தியா 39 வது இடத்தைப் பெற்றுள்ளது. வலுவான மற்றும் நிலையான சுற்றுலாத் துறைக்கு பங்களிக்கும் பல்வேறு குறிகாட்டிகளில் இந்தியாவின் ஒட்டு மொத்த செயல்திறனை இந்தத் தரவரிசை பிரதிபலிக்கிறது.

➢ **தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (National Institutional Ranking Framework), 2024**




✓ ஒன்றிய கல்வி அமைச்சர் ஸ்ரீதர்மேந்திர பிரதான் ஆகஸ்ட் 12 அன்று, 2015 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பை செயல்படுத்தும் இந்திய தரவரிசை 2024 ஐ வெளியிட்டார்.

✓ கடந்த ஆண்டு தரவரிசைப்படி, 'ஒட்டு மொத்த' பிரிவில் இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை முதலிடத்தையும், இந்திய அறிவியல் கழகம் பெங்களூரு மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் டெல்லி ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களையும் பிடித்தன.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| **ஆகஸ்ட் 1** | **உலக நுரையீரல் புற்றுநோய் தினம்** | 2024ஆம் ஆண்டு நுரையீரல் புற்றுநோய் தினத்தின் கருப்பொருள் 'கவனிப்பு இடைவெளியை மூடுவோம்: புற்றுநோய் சிகிச்சைக்கு அனைவரும் தகுதியானவர்களே' என்பதாகும். |
| **ஆகஸ்ட் 1** | **உலகளாவிய வலை தினம்** | இந்த நாள் 1989இல் WWW ஐ உருவாக்கிய ஆங்கில விஞ்ஞானி டிம் பெர்னர்ஸ்-லீயின் அற்புதமான கண்டுபிடிப்பை மதிக்கிறது. |
| **ஆகஸ்ட் 1** | **தேசிய மலை ஏறுதல் தினம்** | வடகிழக்கு நியூ யார்க்கில் உள்ள அடிரோண்டாக் மலைகளின் 46 சிகரங்களிலும் வெற்றிகரமாக ஏறிய பாபி மேத்யூஸ் மற்றும் ஜோஷ் மடிகன் ஆகியோரின் சாதனைகளை நினைவுகூரும் வகையில் இந்த சிறப்பு நாள் நிறுவப்பட்டது. |
| **ஆகஸ்ட் 1-7** | **உலக தாய்ப்பால் வாரம்** | உலக தாய்ப்பால் வாரம் 2024இன் கருப்பொருள், 'இடைவெளியை மூடுவோம்: அனைவருக்கும் தாய்ப்பால் ஆதரவு' என்பதாகும். |
| **ஆகஸ்ட் 3** | **தேசிய தர்பூசணி தினம்** | பண்டைய எகிப்தில் நீண்ட வரலாற்றைக் கொண்ட சுவையான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் தர்பூசணிப் பழத்தைக் கொண்டாட இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. இதன் சாகுபடி கி.மு. 2000க்கு முந்தையது ஆகும். |
| **ஆகஸ்ட் 3** | **இந்திய உடல் உறுப்பு தான தினம்** | மக்களிடையே உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க இந்திய உறுப்பு தான தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **ஆகஸ்ட் 4** | **தேசிய நட்பு தினம்** | நட்பு தினத்தின் முதன்மை நோக்கம் உரையாடலை ஊக்குவிப்பதும், சமூகங்கள், கலாச்சாரங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே பாலங்களை உருவாக்குவதும் ஆகும். |
| **ஆகஸ்ட் 6** | **ஹிரோஷிமா தினம்** | ஹிரோஷிமா தினம், ஆண்டுதோறும் ஆகஸ்ட் 6 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது மனித வரலாற்றில் மிகவும் அழிவுகரமான நிகழ்வுகளில் ஒன்றின் புனிதமான நினைவூட்டலாக உள்ளது. |
| **ஆகஸ்ட் 7** | **தேசிய ஈட்டி தினம்** | ஆகஸ்ட் 7, 2021 அன்று, டிராக் அண்ட் ஃபீல்டில் இந்தியாவின் முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்றில் நீரஜ் சோப்ரா தனது பெயரைப் பதித்தார். |

| | | |
|---|---|---|
| **ஆகஸ்ட் 8** | **வெள்ளையனே வெளியேறு இயக்க நாள்** | ஆகஸ்ட் கிராந்தி தினம் என்றும் அழைக்கப்படும் வெள்ளையனே வெளியேறு இயக்க நாள். ஆகஸ்ட் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவு கூரும் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க தேதியாகும். |
| **ஆகஸ்ட் 9** | **உலக பழங்குடியின மக்களின் சர்வதேச தினம்** | உலகப் பழங்குடி மக்களின் சர்வதேச தினம் என்பது உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். |
| **ஆகஸ்ட் 10** | **உலக சிங்க தினம்** | உலக சிங்க தினம், ஆண்டுதோறும் ஆகஸ்ட் 10ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இது வனவிலங்கு பாதுகாப்பு முயற்சிகளில் ஒரு முக்கியமான தருணத்தைக் குறிக்கிறது. |
| **ஆகஸ்ட் 10** | **உலக உயிரி எரிபொருள் தினம்** | இந்த நாள் ஒரு நிலையான ஆற்றல் மூலமாக உயிரி எரிபொருளின் முக்கியத்துவத்தையும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மற்றும் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் அவற்றின் ஆற்றலை எடுத்துக் காட்டுவதற்கான உலகளாவிய தளமாக விளங்குகிறது. |
| **ஆகஸ்ட் 12** | **சர்வதேச இளைஞர் தினம்** | 2024இன் கருப்பொருள், 'கிளிக்ஸில் இருந்து முன்னேற்றம் வரை நிலையான வளர்ச்சிக்கான இளைஞர் டிஜிட்டல் பாதைகள்' ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னேற்றுவதில் டிஜிட்டல் தொழில் நுட்பங்களின் முக்கிய பங்கை எடுத்துக் காட்டுகிறது. |
| **ஆகஸ்ட் 12** | **உலக யானை தினம்** | 2024 மையக் கருத்து – வரலாற்றுக்கு முந்தைய அழகு, இறையியல் தொடர்பு மற்றும் சுற்றுச் சூழல் முக்கியத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. |
| **ஆகஸ்ட் 13** | **உலக உறுப்பு தான தினம்** | உறுப்பு தான தினம் இந்த உயிர் காக்கும் செயலின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது. |
| **ஆகஸ்ட் 14** | **பிரிவினை திகில் நினைவு தினம்** | 1947ஆம் ஆண்டு இந்தியப் பிரிவினையின்போது ஏற்பட்ட பெரும் துன்பம் மற்றும் இழப்பை நினைவுபடுத்தும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| **ஆகஸ்ட் 19** | **உலக மனிதாபிமான தினம்** | உலகளாவிய சமூகம் ஒரு பயங்கரமான யதார்த்தத்தை எதிர்கொள்கிறது: மனிதாபிமானப் பணியாளர்கள் மோதல் மண்டலங்களில் அதிக அளவில் இலக்குகளாக மாறி வருகின்றனர். |

| | | |
|---|---|---|
| **ஆகஸ்ட் 20** | **உலக கொசு தினம்** | உலக கொசு நாள் 2024இன் கருப்பொருள், 'அதிக சமத்துவ உலகத்திற்காக மலேரியாவுக்கு எதிரான போராட்டத்தைத் துரிதப்படுத்துதல்' என்பதாகும். |
| **ஆகஸ்ட் 21** | **பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி செலுத்தும் தினம்** | இந்த நாள் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 21 அன்று அனுசரிக்கப்படுகிறது. பயங்கரவாதச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களைக் கௌரவிப்பதும் ஆதரிப்பதும் அவர்களின் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஆகஸ்ட் 23** | **தேசிய விண்வெளி தினம்** | இந்தியா தனது முதல் தேசிய விண்வெளி தினத்தை 2024இல் கொண்டாட உள்ளது. இது நாட்டின் விண்வெளி ஆய்வு பயணத்தில் ஒரு வலாற்று மைல்கல்லைக் குறிக்கிறது. |
| **ஆகஸ்ட் 23** | **அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழிப்பதற்கான சர்வதேச தினம்** | இந்த இரவு அட்லாண்டிக் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு எழுச்சியின் தொடக்கத்தைக் குறிக்கிறது. |
| **ஆகஸ்ட் 26** | **சர்வதேச நாய் தினம்** | 2024ஆம் ஆண்டில் 'மனிதனின் சிறந்த நண்பனை' கௌரவிக்கும் சர்வதேச நாய் தினத்தை உலக அளவில் சமூகங்கள் கொண்டாடுவதால் ஆகஸ்ட் 26 என்ற தினம் இனங்களுக்கிடையிலான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. |
| **ஆகஸ்ட் 25-29** | **உலக நீர் வாரம்** | உலக நீர் வாரம் என்பது 1991ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் உலகளாவிய நீர் பிரச்சினைகள் குறித்த முன்னணி மாநாடு ஆகும். |
| **ஆகஸ்ட் 29** | **அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம்** | இந்தக் குறிப்பிடத்தக்க நாள் அணு ஆயுத சோதனையின் பேரழிவு விளைவுகளின் உலகளாவிய நினைவூட்டலாகவும் அணுசக்தி அழிவின் அச்சுறுத்தலிலிருந்து விடுபட உலகத்திற்கான அவசர தேவையை உணர்த்துவதாகவும் செயல்படுகிறது. |
| **ஆகஸ்ட் 30** | **வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம்** | உலகெங்கிலும் உள்ள சமூகங்களைத் தொடர்ந்து பீடித்துள்ள ஒரு பயங்கரமான நடைமுறையை, ஆண்டுதோறும் ஆகஸ்ட் 30ஆம் தேதி கடைபிடிக்கப்படும் கட்டாயக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம் |

| | | |
|---|---|---|
| | | உணர்த்துகிறது. |
| **ஆகஸ்ட் 30** | **தேசிய சிறுதொழில் தினம்** | மையக் கருத்து 2024 - பல நெருக்கடிகளின்போது நிலையான வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சக்தி மற்றும் நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்துதல். |
| **ஆகஸ்ட் 31** | **ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச தினம்** | ஆகஸ்ட் 31 அன்று அனுசரிக்கப்படும் ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச தினம், உலக அளவில் ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த தனிநபர்கள் எதிர்கொள்ளும் பங்களிப்புகள் மற்றும் சவால்களை உலகளாவிய அங்கீகாரத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. |

APOLLO STUDY CENTRE